# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 18 வெள்ளிக்கிழமை 31.01.2025 கதிர் 113









## உள்ளே கூட்டம்...... வெளியே போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உள்ளிட்ட நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி 7 ➤

### வடக்குக்கு வரும் நிதி மத்திக்கு மீளத் திரும்புவது ஏன்?

# அநுரவின் கேள்விக்கணையால் யாழில் திணறிய அதிகாரிகள்



போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்படும்போது உரிய வகையில் செலவு செய்யாமல் மீண்டும் மத்திக்கு ஏன் அனுப்புகின்றீர்கள்? என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, யாழ்ப்பாண-த்தில் இன்று அதிகாரிகளைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கலந்துரையாடலின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை விடயதானங்கள் தொடர்பில் நிதி வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்த நிலையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேள்வியை முன்வைத்திருந்தார். 7 ➤

## ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று 7 ➤

## தையிட்டி திஸ்ஸ விகாரை உடன் அகற்றப்பட வேண்டும்

### 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அநுரவிடம் வழங்கிய கஜேந்திரகுமார்



*யாழ்ப்பாணம், ஜன. 31*

*ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில்* 7 ➤

## மாவைக்கு ஜனாதிபதி அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜன 31

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிரா ஜாவின் புகழுடலுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரில் அஞ்சலி செலுத்தினார்.

மாவை சேனாதிராஜாவின் புகழுடல் யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது புகழுடலுக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் தொடர்ச்சியாக அஞ்சலி செலுத்தி 7 ➤

# மகிந்தவுடன் அவசர ஆலோசனைக்கு தயாராகும் அரசியல்வாதிகள்





கொழும்பு, ஜன 31

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய மற்றொரு குழு, அடுத்த வாரம் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவை சந்தித்து ஒரு வலுவான அரசியல் முடிவை எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மகிந்தவின் அழைப்பின் பேரில் இந்த சிறப்பு சந்திப்பு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி சென்றவர்களை மீண்டும் ஒரு குழுவாக ஒன்றிணைக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்று கலந்துரையாடலின் போது சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

மேலும் பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து வெளியேறிய 20க்கும் மேற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இரு பிரிவினருக்கும் இடையிலான முரண்பாடுகளை களைந்து, வரவிருக்கும் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் ஒரே அணியாக போட்டியிட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான மற்றுமொரு வலுவான கூட்டணியை ஏற்படுத்தும் தீவிர முயற்சிகள் இடமபெற்று வருகின்றன. இதற்காக பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஐ)

## எரிபொருளின் விலையில் மாற்றம்



கொழும்பு, ஜன 31

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருளின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்திற்கு அமைய இவ்வாறு எரிபொருளின் விலையில் மாற்றங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இதேவேளை, கடந்த மாதம் மண்ணெண்ணெய்யின் விலையில் மாத்திரம் மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில், ஏனைய எரிபொருட்களின் விலையில் மாற்றம் மேற்கொள்ளாதிருப்பதற்கு இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்தது.

இதன்படி, கடந்த மாதம் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றின் விலை 188 ரூபாவிலிருந்து 183 ரூபாவாக குறைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், பெப்ரவரி மாதத்திற்கான எரிபொருள் விலை திருத்தம் தொடர்பில் இன்றையதினம் அறிவிக்கப்படும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## திருடரை பாதுகாக்கும் சஜித்



கொழும்பு, ஜன 31

ராஜபக்சர்ளை கைது செய்ய முற்படும் போது சஜித் தரப்பினர் கவலை வெளியிடுவதும், அவர்களை பாதுகாக்க முற்படுகின்றமையும் பெரிய திருடரை பாதுகாக்க ஒன்றிணைந்து மேற்கொள்ளும் செயற்பாடு என துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பில் எதிர்கட்சியினர் மேல் மாகாண ஆளுநருக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையே முன்னெடுத்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவை சட்ட விதிமுறைகளுக்கு அமையவே விடுவிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த விடயத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறுபவர்கள் உரிய சாட்சியங்களுடன் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் சவால் விடுத்துள்ளார்.

குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது சஜித் பிரேமதாச தலைமையிலான அணியினர் அவர்களை பாதுகாக்க முற்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் சஜித் பிரேமதாச தற்போது யாருடன் கூட்டணி அமைத்துள்ளார் என்பதை மக்களுக்கு கூற வேண்டும். எமக்கு கிடைத்துள்ள மக்கள் ஆணையுடன் எவரும் விளையாட வேண்டாம் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

“ராஜபக்சர்ளை கைது செய்ய முற்படும் போது சஜித் தரப்பினர் முணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

யோஷித்தவை கைது செய்யும் போது எதிர்க்கட்சியின் ஹர்ஷன ராஜகருணாவுக்கு கவலை ஏற்படுகிறது.

இரண்டு பக்கத்திலும் உள்ள திருடர்கள் ஒன்றிணைந்துள்ளனர். இவர்கள் பெரிய திருடரை பாதுகாக்க ஒன்றிணைந்துள்ளனர்.

கடந்த 10 வருடங்களாக யோஷிதவை பிரதிவாதியாக பெயரிடுவதற்கு முடியாமல் போனது. அதேபோன்று நாமலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியாமல் போயுள்ளது.

44 கோடி ரூபா பணத்தை பயன்படுத்தி வீட்டை திருத்தும் பணிகளை செய்துள்ளனர். இவ்வளவு பணம் செலவழித்து அவ்வாறு செய்ய முடியுமா?

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே இந்த நாடு வங்குரோத்து அடைந்தது” என பிமல் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கிழக்கு பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



கொழும்பு, ஜன 31

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 250 பட்டதாரிகளுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை - உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

2024 போட்டிப்பரீட்சை நடாத்தப்பட்டு அதிலிருந்து 1000 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது நேர்முகப் பரீட்சையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 250 பேருக்கே ஆசிரியர் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் அம்பாறை மாவட்டத்திலிருந்து சிங்கள மொழிமூலம் 34 பேரும் தமிழ் மொழிமூலம் 61பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் 94 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மொழிமூலம் 19 பேரும் தமிழ் மொழிமூலம் 42 பேருக்குமாக மொத்தம் 250 பேருக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்ன சேகர, வெளிவிகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர் எம் பி எஸ் ரத்நாயக்க ,கிழக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளர், கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மீண்டும் களமிறங்கத் தயாராகும் பசில் ராஜபக்ச



கொழும்பு, ஜன 31

பொதுஜன பெரமுண கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச மீண்டும் தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண கட்சியின் தலைமையில் பரந்துபட்ட எதிர்க்கட்சிக்கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சியொன்றை அவர் முன்னெடுத்துள்ளதாகவும் கூறிப்படுகிறது.

அதற்காக அமெரிக்காவில் இருந்தவாறே இலங்கையில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களுடன் அவர் கலந்துரையாடல்களை நடத்திக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மக்கள் மயப்படுத்தி, அதன் ஊடாக தங்கள் கட்சி இழந்துள்ள செல்வாக்கைத் தூக்கி நிமிர்த்துவதற்கான செயற்பாடுகளையும் அவர் முன்னெடுத்துள்ளார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# ஊடகவியலாளர்கள் தீப்பந்தம் ஏந்தி போராட்டம்










கொழும்பு, ஜன 31

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் வகையில் நேற்று மட்டு காந்தி பூங்காவில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபி அருகில் ஊடகவியலாளர்கள் தீப்பந்த ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டு.ஊடக அமையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து ஏற்பாட்டினையடுத்து அங்கு மாலை 5.00 மணிக்கு ஒன்றினைந்த ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் நினைவுதூபியில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி தீப்பந்தம் ஏற்றி சுமார் ஒருமணித்தியாலம் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

## சிறுவர்களை தற்கொலைக்கு தூண்டும் சமூக ஊடக பயன்பாடு



கொழும்பு, ஜன 31

சிறுவர் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு சமூக ஊடகங்களின் பயன்பாடு வழிவகுத்துள்ளதாக இலங்கை சிவில் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 200இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அதன் தலைவர் விசேட மருத்துவர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

பல நாடுகளில் சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த பல்வேறு தடைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சில சிறுவர்களின் அசாதாண செயற்பாட்டிற்கும் இந்த சமூக ஊடக பாவனையே வழிவகுத்துள்ளது.

இதனால் இலங்கையிலும் சமூக ஊடகங்களை சிறுவர்கள் பயன்படுத்துவதை கட்டுப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடவுச்சீட்டை இணையவழியில் பெற்றுக்கொள்ள வாய்ப்பு

கொழும்பு, ஜன 31

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக காரியாலயங்கள் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் காலத்தை நீடிக்கும் நடவடிக்கைகளை இணையம் ஊடாக விரைவாக மேற்கொள்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வெளிநாட்டு கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் இணையம் ஊடாக விண்ணப்ப படிவம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்புவதும் விரல் அடையாளம் பெறுவதும் தூதரக காரியாலயங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

முதற்கட்ட நடவடிக்கையின் கீழ் 20 தூதரக காரியங்களில் இணையம் ஊடாக விண்ணப்பிக்கும் நடைமுறை செயற்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஏனைய தூதரக காரியாலயங்களுக்கும் இந்த சேவை விரிவுபடுத்தப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச அமைப்புக்கும், துறைசார் அமைச்சரான விஜித்த ஹேரத்திற்கும் இடையிலான சந்திப்பின் போது இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## முட்டை, கோழி இறைச்சியின் விலைகள் குறைந்தது

கொழும்பு, ஜன 31

சாதாரண தரத்தில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் மொத்த விலை 600 ரூபாவாகவும், முட்டை ஒன்றின் மொத்த விற்பனை விலை 28 மற்றும் 29 ரூபாவாகவும் குறைந்துள்ளது.

ஆனால் சில பிரதேசங்களில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை 900 முதல் 1100 ரூபா வரை உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், சில பகுதிகளில் ஒரு முட்டை 40 ரூபாய்க்கும், சிறிய முட்டை 32 ரூபாய் முதல் 35 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

700 முதல் 800 ரூபா வரை மொத்த விலையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை நாளாந்தம் கோழி இறைச்சியின் தேவையின் காரணமாக 600 ரூபாவாக குறைந்துள்ளதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்த முட்டை தேவையை விட அதிகளவு முட்டை கை யிருப்பு கிடைப்பதால் வெள்ளை முட்டை ஒன்றின் மொத்த விலை 28 ரூபாவாகவும், சிவப்பு முட்டை ஒன்றின் மொத்த விற்பனை விலை 29 ரூபாவாகவும் குறைந்துள்ளதாக, முட்டை மொத்த வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர (ஐ)

# பஞ்சாபில் லொறி மீது வேன் மோதி கோர விபத்து.. 9 பேர் பலி!





பஞ்சாபில் இன்று காலை லொறியும் வேனும் மோதிய விபத்தில் 9 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பஞ்சாபில் பெரோஷ்பூர் மாவட்டத்தை சேர்ந்த 20 பேர் ஜலாலாபாத் நகரில் நடைபெற உள்ள திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க இன்று காலை வேனில் சென்றுகொண்டிருந்தனர்.

பெரோஷ்பூர் -பாசில்கா நெடுஞ்சாலையில் கொல்காமவுர் கிராம் அருகே காலை 7.45 மணியளவில் வாகனம் வந்துகொண்டிருந்தபோது ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது மோதியுள்ளார். இந்த கோர விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து குறித்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரம் மேலும் 2 சதவீதம் சரிய வாய்ப்பு– ப.சிதம்பரம்!



டெல்லியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாட்டின் பொருளாதாரம் மேலும் 2 சதவீதமாக சரிய வாய்ப்புள்ளள்ளது என ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலை குறித்து காங்கிரஸ் முன்னாள் எம்.பி.ராஜீவ் கவுடா மற்றும் அவரின் குழுவினர் தயாரித்த அறிக்கையை டெல்லியில் ப.சிதம்பரம் வெளியிட்டார். இதைத் தொடர்ந்து பேசிய அவர் நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளது. முந்தைய ஆண்டை விட பொருளாதார வளர்ச்சி மேலும் 2 சதவீதம் சரிய வாய்ப்புள்ளது. நாட்டில் வேலைவாய்ப்பு இல்லை, வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களின் விகிதம் 45 சதவீதத்தை நெருங்கியுள்ளது. இளைஞர்களுக்கு பிரதமர் மோடி அவ்வப்போது வழங்கும் பணி நியமன கடிதங்கள் மூலம், காலிப்பணியிடங்கள் நிரப்பப்படுகிறதே தவிர, புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதில்லை.

கடந்த 4 முதல் 5 ஆண்டுகள் மக்களின் வருமானத்தில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. உணவு, கல்வி, சுகாதாரப் பணவீக்கம் இரட்டை இலக்கங்களை எட்டியுள்ளது. பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரும் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. இதை சரி செய்ய மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவீதம் குறைக்க வேண்டும் –பிரதமர் மோடி தெரிவிப்பு



உடல் பருமன் காரணமாக சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவீதம் குறைக்க வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற 38-வது தேசிய விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவை பிரதமர் தொடங்கி வைத்தார். விளையாட்டு வீரர்கள் குழுமியிருந்த அக்கூட்டத்தில் பிரதமர் மோடி கூறுகையில், மாறிவரும் வாழ்க்கை சூழல், உடற்பயிற்சி இன்மை, துரித உணவு பழக்கங்களால் நம் நாட்டில் உடன் பருமன் உள்ள நபர்கள் அதிகரித்து வருகின்றனர். சமையல் எண்ணெயை அதிகமாக உட்கொள்வது, உடல் பருமன் அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக உள்ளது. முதியவர்கள் மட்டுமின்றி இளைஞர்களும் கூட இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அன்றாட உணவில் சமையல்எண்ணெய்பயன்பாட்டை குறைத்துக்கொண்டாலே உடல் பருமன், நீரிழிவு மற்றும் இதய நோய்களிலிருந்து விடுபடலாம்.

ரேஷனில் கிடைக்கும் 2 லிட்டர் எண்ணெயின் பயன்பாட்டை 10 சதவீதம் குறைத்தாலே போதும் நாம் பலவிதமான நோய்களிலிருந்து விடுபடலாம்.

தினமும் உடற்பயிற்சி செய்வதோடு மட்டுமல்லாமல் சமச்சீரான மற்றும் சத்தான உணவில் கவனம்செலுத்த வேணடும் எனவும் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

கடுகு எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய்யை உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்தது என இந்திய தேசிய மருத்துவ ஆராய்ச்சி கழகம் மற்றும் தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் கூறியுள்ளது.

கடுகு எண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், சோயா எண்ணெய் என்று ஒவ்வொரு முறையும் சுழற்சி முறையில் சமையலில் பயன்படுத்தினால் உடல் ஆரோக்கியம் மேம்படும் எனவும் தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் அறிவுறுத்தி உள்ளன.

## கேரளாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த 27 பேர் கைது!



கேரளாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த 27 பே பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

பங்களதேஷில் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. அதே வேளை,பங்களாதேஷில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவில் குடியேறுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக நுழையும் பங்களாதேஷை சேர்ந்தவர்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், கேரள மாநிலம் கொச்சியில் சட்டவிரோதமாக தங்கி பணிபுரிந்த 27 பேரை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள வடக்கு பரவூர் பகுதியில் எர்ணாகுளம் பொலிஸார் மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இணைந்து நடத்திய அதிரடி சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடம் விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பும் பங்களாதேஷை சேர்ந்த 28 வயதான தஸ்லிமா பேகம் என்பவரை பொலிஸார் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து எர்ணாகுளம் மாவட்ட காவல் அதிகாரி வைபவ் சக்சேனா தொடங்கிய ‘ஆபரேஷன் கிளீன்’ என்ற சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த கைது சம்பவம் நடந்தது குறிப்பிடத்தக்கது.



# குழந்தைகளை பாதிக்கும் பிரிவுப் பதற்றம்!

குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. அவர்களின் பக்குவமறிந்து நேர்மறையான சிந்தனைகளை விதைத்து வளர்த்தெடுப்பது என்பது பெற்றோருக்கு பெரும் சவால்தான். குழந்தை வளர்ப்பில் பெற்றோர் காட்டும் சிறு அலட்சியம், கவனக்குறைவுகூட உளவியல் ரீதியாக அவர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதனால், அந்தக் குழந்தை வளர்ந்து சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறும்போது, பல்வேறு விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஆண், பெண் இருவருமே வீட்டின் பொருளாதாரத்துக்காக உழைக்கும் காலம் இது. திருமணமாகி குழந்தை பிறந்த பிறகு, தான் பார்க்கும் வேலையை விட்டுவிட்டு குழந்தை வளர்ப்பில் கவனம்செலுத்தும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

குழந்தை பிறப்புக்கு ஒரு சிறிய இடைவெளி மட்டும் எடுத்துவிட்டு, மீண்டும் வேலைக்குச் செல்லும் பெண்கள்தான் அதிகமாக இருக்கின்ற னர். மகப்பேறு விடுமுறை காலம் 6 மாதம் முதல் அதிகபட்சம் 9 மாதம் வரை வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு, குழந்தையைப் பிரிந்து வேலைக்குச்செல்லவேண்டிய கட்டாயம்ஏற்படுகிறது. இதனால், அதிகம் பாதிக்கப்படுவது குழந்தைதான்.

அதுவரை அம்மாவின் அரவணைப்பிலேயே இருந்த குழந்தை, வேறு ஒருவரின் கண்காணிப்புக்குச் செல்ல நேரிடும். இது, இயல்பான விஷயமாக இருந்தாலும், இந்தப் பிரிவு குழந்தைகளிடையே, 'பிரிவுப் பதற்றம்' (Separation anxiety) என்ற உளவியல் பிரச்சனையை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்கின்றனர் மருத்துவர்கள்.

பிரிவுப் பதற்றம் என்றால் என்ன, அதைப் பெற்றோர் எப்படிக் கையாள வேண்டும் என்று குழந்தை நல மருத்துவர் டாக்டர் ஜெயக்குமார் ரெட்டி விளக்குகிறார்.

"ஒரு குழந்தை ஆறு மாதத்திலிருந்து நபர்களை அடையாளம் கண்டுகொள்ளத் தொடங்கும். அந்தத் தருணத்தில், தன்னிடம் அன்பு காட்டுபவரிடமிருந்து சிறிதுநேரம் பிரிவதைக்கூட குழந்தை ஏற்றுக்கொள்ளாது. அது, அம்மாவாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அப்பாவாகவோ, வேலைக்குச் செல்லும்போது குழந்தைகளை விட்டுச்செல்லும் உதவியாளராகவோகூட இருக்கலாம். குழந்தையை யார் அதிகம் பராமரிக்கிறார்களோ, அதனுடன் அதிக நேரம் செலவழிக்கிறார்களோ... அவர்கள் வேலைக்குச் செல்லும்போதோ, வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதோ குழந்தையால் தாங்கிக்கொள்ள முடியாது.

சிறுவயதுக் குழந்தைகள் அதிக நேரம் உறங்கிக்கொண்டே இருப்பார்கள். உறங்கி எழும்போது, அருகில் அம்மாவோ குழந்தையைக் கவனித்துக்கொள்பவர்களோ இல்லையென்றால் அழத்தொடங்குவார்கள்.

அவர்கள் அலுவலகத்துக்கோ, வெளியிடங்களுக்கோ செல்லும் தருணத்தில் அழுவது, அவர்கள் வெளியே செல்கிறார்கள் என்று தெரிந்துவிட்டால் அவர்களை சுற்றிச்சுற்றி வருவது, அழத்தொடங்குவது போன்ற செயற்பாடுகளைக் குழந்தைகளிடம் இயல்பாகப் பார்க்கமுடியும். ஆனால், அவர்கள் வெளியே சென்று நீண்ட நேரமாகியும் அழுதுகொண்டேயிருப்பது, சாப்பாட்டைத் தவிர்ப்பது, தூங்காமல் நச்சரிப்பது, எரிச்சல் உணர்வு, பயம், பதற்றம் போன்ற நிலை நீடிப்பதையே 'பிரிவுப் பதற்றம்' என்கிறோம்.



'பிரிவுப் பதற்றம்' என்பது, கூட்டுக் குடும்பங்களில் மிகவும் குறைவு. அம்மாவின் அரவணைப்பு இல்லாவிட்டாலும், குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள தாத்தா, பாட்டி போன்ற நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள். ஆனால், தனிக்குடும்பங்களில் அப்பா, அம்மா, குழந்தைகள் மட்டும்தான் இருக்கின்றனர். இதனால், குழந்தைகள் 24 மணி நேரமும் அம்மாவின் அருகில் இருக்க விரும்புகிறார்கள்.

குழந்தைகள், பெற்றோர் தவிர வேறு யாரிடமும் ஈடுபாடு காட்ட மாட்டார்கள். பெற்றோர், '24 மணி நேரமும் நான்தான் என் குழந்தையைப் பார்த்துக்கொள்வேன்' என்று நினைத்தால், பிரிவுப் பதற்றம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அதனால், ஏதேனும் அவசர அல்லது அத்தியாவசிய நேர்வுகள் நிகழும்போது குழந்தைகளை விட்டுவிட்டு பெற்றோரால் போகமுடியாத நிலை ஏற்படும். இந்த நிலை தொடர்ந்தால், அந்தக் குழந்தை பள்ளிக்குச் செல்லும்போது அதன் இயல்பான நடத்தையில் மாற்றம் ஏற்படும். இதனால், பேசுவதில் தாமதம், கண்ணைப் பார்த்து பேசுவதைத் தவிர்ப்பது போன்ற நிலை ஏற்படும். மாணவர்களுடன் இயல்பாகப் பழகமுடியாத நிலை ஏற்பட்டு, தனிமையை நாடும் சூழலும் ஏற்படலாம்.

பெரிய குற்ற வழக்குகளில் சிக்குபவர்களின் கதைகளைக் கேட்டால், 'சிறு வயதில் ஏற்பட்ட ஏதோ ஒரு பாதிப்புதான் இதுபோன்ற செயல்களைச் செய்வதற்கு தூண்டியதாக'ச் சொல்வார்கள். பிரிவுப் பதற்றம்கூட இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். பெற்றோர்தான் ஒரு குழந்தையின் குழந்தைப் பருவத்தில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

உறவினர்களைக் குழந்தைகளிடம் பழகவிட்டாலே இந்தப் பிரச்ளயனை எளிதாகத் தீர்ந்துவிடும். குழந்தை பிறந்து ஆறுமாதம் ஆகி, நபர்களை அடையாளம் கண்டுபிடிக்கத் தொடங்கியதும், அவர்களிடம் தாத்தா, பாட்டி போன்ற நெருங்கிய உறவினர்களை அறிமுகப்படுத்த வேண்டும். அவர்களையும் குழந்தைகளைக் கையாள்வதற்கு அனுமதிக்க வேண்டும். அதனால் அம்மா இல்லாவிட்டாலும் அந்தச் சூழலை அனுசரித்துச் செல்ல குழந்தை பழகிவிடும்.

உறவினர்களிடம் குழந்தைகளை விட்டுச்செல்லும்போது, 'நான் உடனே வந்துவிடுவேன்' என்று பொய்யெல்லாம் சொல்லக் கூடாது. உண்மையைச் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும். பெற்றோர் இல்லை என்றாலும் குழந்தைகள் இயல்பாக இருக்கும் வகையில் நல்ல சூழலை உருவாக்கிவிட்டுப் போக வேண்டும். உடன் இருக்கும் நேரங்களில் குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிட வேண்டும்.

பிரிவுப் பதற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையைப் பெற்றோர் கையாள முடியாத கட்டத்தில், குழந்தைகள் நல நிபுணர் அல்லது குழந்தைகள் மனநல மருத்துவரை அணுகலாம். மருத்துவர்களின் எளிய ஆலோசனைகள், வழிமுறைகள் இந்தப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு உதவிபுரியும்.

ஒரு குழந்தை ஆறு மாதத்திலிருந்து நபர்களை அடையாளம் கண்டு கொள்ளத் தொடங்கும். அந்தத் தருணத்தில், தன்னிடம் அன்பு காட்டுபவரிடமிருந்து சிறிதுநேரம் பிரிவதைக்கூட குழந்தை ஏற்றுக்கொள்ளாது. அது, அம்மாவாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அப்பாவாகவோ, வேலைக்குச் செல்லும்போது குழந்தைகளை விட்டுச்செல்லும் உதவியாளராகவோகூட இருக்கலாம். குழந்தையை யார் அதிகம் பராமரிக்கிறார்களோ, அதனுடன் அதிக நேரம் செலவழிக்கிறார்களோ... அவர்கள் வேலைக்குச் செல்லும்போதோ, வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதோ குழந்தையால் தாங்கிக்கொள்ள முடியாது

# நெதர்லாந்து அருங்காட்சியகத்தில் 2 ஆயிரம் ஆண்டுகள் புழமையான தங்க கிரீடம் திருட்டு!



நெதர்லாந்து அருங்காட்சியகத்தில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான தங்க கிரீடம் திருடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நெதர்லாந்து அருகே ஏசேன் நகரில் டிரென்ட்ஸ் அருங்காட்சியகம் உள்ளது. இங்கு ரோமானியா நாட்டின் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான டசியா நாகரிகத்தை சேர்ந்த தங்க கிரீடம் மற்றும் தங்க காப்புகள் ஆகியவை பார்வையாளர்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தநிலையில் சம்பவத்தன்று இரவு மர்ம கும்பல் ஒன்று அருங்காட்சியகத்தில் துளையிட்டு புகுந்து தங்க கிரீடம், தங்க காப்புகள் ஆகியவற்றை கொள்ளையடித்துவிட்டு தப்பி சென்றனர்.

அருங்காட்சியகத்தில் உரிய பாதுகாப்பு அம்சங்கள் இல்லாததால்தான் திருட்டு சம்பவம் நடந்ததாக நெதர்லாந்து மீது ரோமானியா அரசாங்கம் குற்றஞ்சாட்டி உள்ளது. இந்தநிலையில் திருட்டுப்போன தங்க கிரீடம் மற்றும் காப்புகளை மீட்க நெதர்லாந்து பொலிஸார் சார்பில் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

## இராணுவ ஹெலிகாப்டர் – பயணிகள் விமானம் மோதிய விபத்து: 67 பேர் உயிரிழப்பு!



இராணுவ ஹெலிகாப்டர் மற்றும் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானமும் நடுவானில் மோதிய விபத்தில் 67 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய ஹெலிகாப்டர் மற்றும் விமானத்தில் இருந்த ஒருவர்கூட உயிர்பிழைக்காதது சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

விபத்துக்கு சற்றுமுன் வரை ராணுவ விமானியின் நடவடிக்கைகளை ஆராய்ந்த அதிகாரிகள், இந்த விமான பேரழிவு ஏற்பட்ட நேரத்தில் விமான நிலையத்தின் தரை கட்டுப்பாட்டு ஊழியர்கள் வழக்கத்தை விட குறைவான எண்ணிக்கையில் இருந்ததாக தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு வாஷிங்டனுக்கு எதிரே உள்ள ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் ஹெலிகாப்டர் தரையிறங்கும் போது ஜெட் விமானத்தின் பாதையில் பறந்து சென்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமானத்தில் 60 பயணிகள் மற்றும் நான்கு பணியாளர்கள் இருந்தனர். ஹெலிகாப்டரில் மூன்று வீரர்கள் இருந்தனர்.

ஃபெடரல் ஏவியேஷன் அறிக்கையின்படி, மோதல் நடந்தபோது, ரீகன் நேஷனலில் உள்ள கோபுரத்தில் இரண்டு பேருக்கு ஒதுக்கப்பட்ட பணியை ஒரு விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் மட்டுமே செய்து கொண்டிருந்தார் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

2001 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவில் நடந்த மிக மோசமான விமான விபத்து இதுவாகும். மோதலுக்கான காரணம் குறித்து உடனடி தகவல் எதுவும் வெளியாகவில்லை.

## ஜப்பானில் பொது இடங்களில் புகைப்பிடிக்க தடைவிதிப்பு!




5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலக புகழ்பெற்ற கண்காட்சிகளில் ஒன்றாக உலக எக்ஸ்போ கண்காட்சி விளங்குகிறது. கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா தொற்று பரவலையொட்டி இந்த கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 2022-ஆம் ஆண்டு துபாயில் கோலாகலமாக நடந்தது. ஜப்பானின் ஒசாகா நகரில் உலக எக்ஸ்போ கண காட்சி 2025 நடைபெற இருக்கிறது. இதில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்டு அரங்குகளை அமைத்து தங்கள் நாட்டின் பராம்பரியம் மற்றும் பண்பாட்டை காட்சிப்படுத்த உள்ளனர்.

ஒசாகாவில் உலக எக்ஸ்போ கண்காட்சி 2025-க்கான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்தநிலையில் ஒசாகாவில் பொது இடங்களில் சிகரெட், இ-சிகரெட் உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தி புகைப்பிடிக்க அந்த நகர மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்ததாண்டு முழுவதும் தடை அமலில் இருக்கும் என்றும் மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஆப்பிரிக்கா நாட்டில் வன்முறை உயிரிழப்பு எண்ணிக்கை 17 ஆக உயர்வு!

ஆப்பிரிக்கா நாட்டில் வெடித்த வன்முறையால் உயிரிழப்பு எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கிழக்கு ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் பொதுமக்களை குறிவைத்து எம்-23 என்ற கிளர்ச்சி குழு அடிக்கடி தாக்குதல் நடத்துகிறது. எனவே அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையாக போராடி வருகிறது.

இதற்கிடையே கோமா நகரில் ஊடுருவிய கிளர்ச்சியாளர்கள் அங்கு சரமாரி தாக்குதல் நடத்தினர். இதன் தொடர்ச்சியாக முன்செஸ்க் நகரில் உள்ள சிறைச்சாலை பகுதியிலும் கிளர்ச்சியாளர்கள் புகுந்து தாக்குதல் நடத்தினர். பொலிஸார் மற்றும் கிளர்ச்சியளர்கள் இடையே ஏற்பட்ட வன்முறையில் ஐ.நா அமைப்பை சேர்ந்த வீரர்கள் உள்பட 13 பேர் உயிரிழந்திருந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் வன்முறை தொடர்ந்து வரும்நிலையில் அப்பகுதியில் உள்ள 1 லட்சம் பொதுமக்கள் வெளியேறி அண்டை நகரங்களுக்குள் தஞ்சம் புகுந்து வருகிறார்கள். இந்தநிலையில் வன்முறையில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த 4 பேர் உயிரிழந்தனர். இதனால் ஆப்பிரிக்கா நாட்டில் வன்முறைக்கு



## மாவைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்ற நிலையில், நாளைமறுதினம் ஞாயிற்றுக்குழமை இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாவை சேனாதிராஜாவின் இல்லத்துக்குச் சென்று அன்னாரின் புகழுடலுக்கு தனது அஞ்சலியைச் செலுத்தினார். அத்துடன் மாவை சேனாதிராஜாவின் குடும்பத்தினருக்குத் தனது ஆறுதலையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## உள்ளே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டிருந்த வேளை, வேலையற்ற பட்டதாரிகள் மாவட்ட செயலகத்துக்கு அருகில் தமக்கு வேலை வாய்ப்பு கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், அமைதியாகப் போராட முடியும் எனவும், போராட்டத்துக்குத் தடை விதிக்க முடியாது எனவும் தெரிவித்த மன்று, தடை கோரிய மனுவை நிராகரித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி யாழ்ப்பாணம் மாவட்ட செயலக சுற்றுவட்டப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அநுரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"மத்திய அரசால் வடக்கு மாகாண அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால், ஒதுக்கப்படும் நிதிகள் பலவும் செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படும் நிலை காணப்படுகின்றது. இந்த மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இருந்த போதிலும் பல நிதிகள் திருப்பி அனுப்பப்படுகின்ற நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ளக வீதிகளைப் புனரமைப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும்?" - என்று ஜனாதிபதி இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரி விவரங்கள் தெரியாது தடுமாறிய நிலையில், ஜனாதிபதி மீண்டும்,

"வீதிகளைப் புனரமைப்பதற்கு எவ்வளவு நிதி வேண்டும் எனச் சரியாகக் கூறுங்கள், ஏறக்குறைய என்று கதை கூற வேண்டாம்.

நாடு பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து இன்னும் மீளவில்லை. இங்கு பெற்றோல் இருக்கின்றது, காஸ் இருக்கின்றது என்றால் பொருளாதார நெருக்கடி இல்லை என நினைக்க வேண்டாம்.

நாங்கள் இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து கொண்டே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

ஆகவே, அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்தால் அதனை உரிய முறையில் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும்." - என்று கூறினார்.

இவ்வாறு ஜனாதிபதி பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் தகவல்களைக் கேட்ட போதும் துறை சார்ந்த ரீதியில் உரிய தகவல்கள் தெரியாமல் அதிகாரிகள் தடுமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தையிட்டி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*இன்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.*

*அந்த மகஜரில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு:-*

*1. யாழ். போதானா வைத்திய சாலையின் மகப்பேற்று விடுதி உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.*

*2. யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளர் விடுதிகள் அதிகளவான நோயாளர்களால் நிரம்பி வழிகின்றது. பல விடுதிகளில் கட்டில்கள் பற்றாக்குறை காரணமாக அவ்வப்போது நோயாளர்கள் நிலங்களில் படுக்கவேண்டிய நிலையும், இரவு முழுவதும் கதிரைகளில் அமர்ந்தவாறு உறங்கும் நிலையும், ஒரு கட்டிலில் இரண்டு நோயாளர்கள் படுக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. நோயாளிகளைப் பராமரிப்பதற்காக உடனிருப்பவர்கள் பல மணி நேரமாக நின்ற நிலையிலேயே பராமரிப்பு பணிகளில் ஈடுபட வேண்டிய நிலையிலுள்ளனர். இந்த நிலை உடனடியாகச் சீர் செய்யப்படல் வேண்டும்.*

*3. யாழ். பண்ணையில் அமைந்துள்ள மார்பாக சிகிச்சை (காசநோய்) பிரிவில் அடிப்படை வசிதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய் பிரிவை அந்த இடத்தில் மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.*

*மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை தற்காலிகமாக கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இயங்குகின்றது. ஆனாலும் அங்கு அந்த அலகிற்கான ஆளணிகள் எதுவும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக ஆளணி நியமனம் செய்யப்படல் வேண்டும்.*

*பண்ணையில் உள்ள மார்பாக சிகிச்சை நிலையத்திற்கென நிரந்தரமான எக்ஸ்றே றேடியோ கிறாபர் இல்லை. நிரந்தரமாக நியமிக்கப்படல் வேண்டும். (தற்போது திங்கள் புதன் ஆகிய இரண்டு நாள்கள் மட்டும்)*

*இவ்வைத்தியசாலையில் பரிசோதனைக்காக பெறப்படும் சளி மாதிரிகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதனப் பெட்டிகள் பெரும்பற்றாக்குறையாக உள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் ஐந்து நாள்களுக்குள் சோதனை செய்யப்படல் வேண்டும். ஆனால் உரிய கருவிகள் இன்மையால் ஒரு வருடத்துக்கும் மேலாக சேமிப்பில் உள்ள நிலை காணப்படுகின்றது. இந்த நிலை சீர் செய்யப்படல் வேண்டும்.*

*4. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெருமளவான இளையோர் போதைப் பொருள் பயன்பட்டுக்கு அடிமையாகியுள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை புனவாழ்வளித்து மீட்டெடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைக்கப்படல் வேண்டும்.*

*5. யாழ். மாவட்டத்தில் கடற தொழில்படகுகளை பாதுகாப்பதற்கான கல்லணைகள் அமைத்தல் -பருத்தித்துறை மூர்க்கம், முனை, கொட்டடி கடற்கரை, சுப்பர்மடம், இன்பர்சிட்டி கடற்கரை, சக்கோட்டை கடற்கரை, திக்கம் கடற்கரை, கொத்தியால் கடற்கரை, றேவடி கடற்கரை, ஆதி கோவிலடி கடற்கரை, தொண்டமனாறு கடற்கரை, பலாலி கடற்கரை, சேந்தான்குளம் கடற்கரை, மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் படகுகள் தரித்துநிற்கும் இடங்களில் படகுகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புக் கல்லணைகள் அமைக்கப்படல் வேண்டும்.*

*படகுகள் நுழையும் பகுதிகளை ஆழமாக்குதல் -*

*மூர்க்கம் தொடக்கம் மாதகல் வரை படகுகள் தொழிலுக்காக இறக்கப்படும் நுழைவு வான்கள் நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமையினால் படகுகள் சேதமடைகின்றன. படகுகள் சேதமடைவதனை தடுக்கும் வகையில் குறித்த இடங்கள் உடனடியாக ஆழப்படுத்தப்படல் வேண்டும்.*

*கொத்தியால் கடற்கரை யில் படகுகள் தரிப்பிடத்தில் அகழப்பட்ட மண்ணை அப்புறப் படுத்த நடவடிகை எடுத்தல் -*

*வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்தொழில் அமைப்பினருக்குச் சொந்தமான படகுகள் தரித்து நிற்கும் பகுதியிலிருந்து அகழப்பட்ட மண் கடற்கரையிலேயே குவிக்கப்பட்டுள்ளது. அந்த மண் மீண்டும் மீண்டும் இறங்கு துறைக்குள் சென்று படகுகள் நிறுத்தும் பகுதியை மூடுவதால் படகுகளை நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொட்டப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இன்னமும் வழங்கவில்லை. எனவே குறித்த பகுதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அண்மையிலுள்ள பொது அமைப்புக்களது பயன்பாட்டுக்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படல் வேண்டும்.*

*6. இந்திய மீனவர்களால் வலைகள் படகுகள் சேதமாக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படல் வேண்டும்.*

*7. கனமழை வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட விவசாய அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படல் வேண்டும்.*

*8. யாழ். குடாநாட்டில் சொந்தக் காணிகள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கவும் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமலுள்ளது, அத்தொகை அதிகரிக்கப்படல் வேண்டும்.*

*9. தையிட்டியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரை கட்டுமானம் அகற்றப்படல் வேண்டும். தனியார் காணிகள் அனைத்தும் பொது மக்களிடம் ஒப்படைக்கபடல் வேண்டும்.*

*10. மயிலிட்டியில் விடுவிக்கப்படாத மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உட்பட யாழ். குடாநாட்டில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொதுக் காணிகள் அனைத்தும் விடு விக்கபடல் வேண்டும்.*

*வசாவிளான் சந்தியிலிருந்து பலாலி சந்தி வரையான வீதி பொது மக்கள் பயன்பாட்டுக்காகத் திறக்கப்படல் வேண்டும்.*

*11. யாழ். நகர அபிவிருத்திக்கு கடந்த 2017 ஆம் ஆண்டில் உலக வங்கி வழங்கிய நிதி உதவியில் வடிகாலமைப்பில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*12. யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் தகுதி பெற்ற திட்டமிடலாளர் ஆளணி உருவாக்கப்பட்டு, நியமனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*யாழ்ப்பாணம் மாவட்டம் முழுமைக்குமான பிரதான வடிகாலமைப்பு திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.*

*13. வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பில் மினசார சபைக்கும் - பிரதேச சபைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.*

*14. நெடுந்தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் படகுச் சேவைகள் கடற்படையினரிடம் இருந்து மீளப்பெற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படல் வேண்டும்.*

*15. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இயக்கப்பட்டுவந்த குறிகாட்டுவான் - நயினாதீவுக்கான போக்குவரத்துப் பாதை பழுதடைந்த நிலையில் ஒருவருடமாகத் திருத்தப்படாமல் உள்ளது. அதனை உடனடியாகத் திருத்த வேண்டும். நயினாதீவு தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக அங்கு போக்குவரத்து இடம்பெறுவதில்லை. அந்த இறங்குதுறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.*

*16. குறிகாட்டுவான் இறங்குதுறை உடனடியாக விஸ்தரிக்கப்படல் வேண்டும்.*

*குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து புங்குடுதீவு நோக் கிச் செல்லும் வீதி சுமார் 5 கிலோ மீற்றர் குன்றும் குழியுமாக உள்ளது. உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.*

*17. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தர மாகாண கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*18. வடக்கு மாகாணாத்தில் எஸ்.எல்.ஈ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கான பற்றாக்குறை 50 வீதத்துக்கு மேல் காணப்படு கின்றது. இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும் வகையில் பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.*

*19. வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 555 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும்.*

*20. வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும்.*

# மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும்

## வெகு விரைவில் நடவடிக்கை என்று ஜனாதிபதி உறுதி

*யாழ்ப்பாணம், ஜன. 31*



மக்களின் காணிகள் மக்களுக்கே உரித்தாக வேண்டும் எனவும், வடக்கின் காணிப் பிரச்சினை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு, வெகு விரைவில் மக்களுக்கு மீண்டும் காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்காக அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக நாட்டின் எந்தப்பகுதியிலும்காணிகளை அரசாங்கம் சுவீகரிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்தக் காணிகளுக்குப் பதிலாக கட்டாயமாக மாற்று காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மக்களுக்கான மிக முக்கியமான திட்டங்களுக்காகஜனாதிபதிமாளிகையை முற்றாக விடுவிக்கத் தயார் எனவும், அதற்கான உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார். போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இன்னும் வடக்கு மாகாணத்தில் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து விரைவான தீர்மானங்களை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரம், கடற்றொழில், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, போக்குவரத்து பிரச்சினைகள், ஆளணி குறைபாடு, காணிவிடுவிப்பு உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டது. யாழ் மாவட்டத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு முன்வைத்தனர். அதில் அநேக பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி உடனுக்குடன் தீர்வு வழங்கியதோடு அவை தொடர்பில் கலந்துகொண்ட வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரைகளை வழங்கினார்.

பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அரச நிறுவனங்களை நடத்திச் செல்வதற்கு 30,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளன என்று தெரிவித்த ஜனாதிபதி, ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதோடு, பட்டதாரிகளுக்கும் இதன்போது வாய்ப்பு கிட்டும் என்றும் தெரிவித்தார்.

இதில், பொலிஸ் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும், விண்ணப்பிப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மூன்று புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்களை முதலீடு செய்ய அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் மீது விசேட அக்கறை செலுத்தி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

தீவுப் பகுதிகளில் போக்குவரத்து சீராக இல்லை எனவும், கிராமப் புறங்களில் சிறுவீதிகளை இணைத்து முன்னெடுக்கப்பட்ட பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன் இங்கு தெரிவித்தார். கிராமப்புறங்களில் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். வீதி அபிவிருத்தி தொடர்பாகவும் தீவுகளுக்கான போக்குவரத்து குறைபாடுகள் குறித்தும் படகு சேவைகள் ஆரம்பிப்பது பற்றியும் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

தற்போதைய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து கட்டமைப்பை பலப்படுத்த வலுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்த திட்டமிட்டுள்ளது. அதன்படி இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் இணைந்து செயற்படும் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வட மாகாணத்திற்கான புகையிரத சேவைகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த வருடம் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய புதிய சுற்றுலாத்தலங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

வடக்கில் சில துறைகளில் காணப்படும் ஆளணிக் குறைபாடு தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வடமாகாண அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்புகளை அரசியல் அதிகாரத்தின் தலையீடு இன்றி தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அரச சேவையை வடக்கில் மேலும் பலப்படுத்துவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உறுதியளித்தார். கடற்றொழில் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டதோடு இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்தும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

மீன்பிடி பிரச்சினைக்கு தீர்வுகாண இராஜதந்திர ரீதியில் அதிகபட்சமாக தலையீடு செய்வதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார். மீன்பிடித்துறைமுகம், மீன வர்களுக்கான வீட்டுத்திட்டம், தீவுகளுக்கான படகுச் சேவைகளில் உள்ள குறைபாடுகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

நீர்ப் பிரச்சினை தொடர்பில் மக்கள் பிரதநிதிகள் கருத்து வெளியிட்டிருந்ததோடு நீர்வநியோக திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி முன்னெடுப்பது குறித்து வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை முன்வைத்தார். நாட்டிலேயே மிகக் குறைந்த அளவு குழாய் நீரை பயன்படுத்தும் மாகாணமாக வடமாகாணம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தற்போது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் என்பதுடன், இம்முறை வரவு செலவு திட்டத்தில் புதிய நீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாக கூறிய ஜனாதிபதி, வடக்கின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் உட்பட முழு அரச சேவையையும் மேலும் வலுப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார். மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசியல் அதிகார தரப்பும் அரச பொறிமுறையும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்பட்டதோடு தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடு குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார். சீரீ ஸ்கேனிங் இயந்திரம், அவசர சிகிச்சைப் பிரிவு போன்ற குறைபாடுகள் தொடர்பில் அவர் உரையாற்றியதோடு அவை அவசர தேவையாக உள்ளது எனவும் குறிப்பிட்டார். மேலும், தமிழ் புற்றுநோயாளர் மகரகமையில் இருந்து இங்கு அனுப்புவதில் ஏற்படும் சில சிக்கல்கள் குறித்தும் சிறிய ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக வைத்தியர் ராமநாதன் அச்சுனா எம்.பி கருத்து முன்வைத்தார். வைத்தியர் இடமாற்றங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து எஸ்.ஸ்ரீதரன் எம்.பி மற்றும் வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன் ஆகியோர் கருத்து வெளியிட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள கிராமிய வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதோடு 180 கிலோ மீட்டரை விட அதிக வீதிகளை திருத்த வேண்டியுள்ளதாகவும் தீவுகளில் உள்ள வீதிகளே அதிகம் சேதமடைந்துள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர். வீதி அபிவிருத்தி தொடரபில் வடமாகாண எம்.பிகள் சிலரும் கருத்து வெளியிட்டனர்.

வடக்கிலுள்ள கிராமிய வீதிகளை புனரமைக்க இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் அதனை முழுமையாக பயன்படுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ் நகர மண்டப எஞ்சிய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. இதற்கான இந்த வருடம் 400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு கட்டடத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் அதனை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. கடவுச்சீட்டு பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, யாழ் மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகமொன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில் மாவட்ட செயலாளருடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். மாற்றுத் திறனாளிகளுக்கு அரச நியமனம் வழங்குகையில் வாய்ப்பு வழங்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதேசவாசி ஒருவர் கோரினார். தொழில்வாய்ப்பு வழங்குகையில் மாற்றுத்திறனாளிகளுக்கு குறிப்பிட்ட ஒதுக்கீடொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். அதேநேரம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் யாழ். மாவட்ட சுகாதார, போக்குவரத்து, நீரியல் வளத்துறை, போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்ததுடன் அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி சாதகமான தீர்வுகளை கூறினார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன் கருணானந்தன், வைத்தியர் சரவணபவநந்தன் சண்முகநாதன், ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் இராமநாதன் அர்ச்சுனா, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், வடமாகாண பிரதமச் செயலாளர் எல். இளங்கோவன், யாழ்.மாவட்டச் செயலாளர் எம். பிரதீபன் ஆகியோருடன் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான முப்படை அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2025 இல் வெளியிடப்பெற்றது.